அடுத்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல, முதலமைச்சரவர்களைப் பார்க்க வெண்டுமென்றால் எத்தனை நாளைக்கு முன்பே எழுதி கொடுக்க வேண்டும்? எழுதி கொடுக்க வேண்டுமா அல்லது டெலிபோனிலே கேட்டால் போதுமா? அந்த விவரம் தெரிந்துவிட்டால் அது இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் நல்லது. ஏன்? மாண்புமிகு அமைச்சர்களுக்கும் நல்லதுதான். இதைப்பற்றி முதலிலேயே நான் பேச ஆரம்பித்தால் தகராறு வரும் என்று தெரியும்; அதனால் தான் கடைசியாக வைத்துக் கொண்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமாகி விட்டது, முடித்து விடுங்கள்.

திரு. துரை முத்துசாமி: இப்படிப்பட்ட சீர்கேடுகள் இல்லாமல் மக்களுக்கு எளிதாக காண முடிகின்ற முதலமைச்சராக இருக்க வேண்டும். இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், நலிவுற்ற மக்கள் எல்லாம் எளிதாக வந்து பார்த்து, தங்கள் குறைகளை எடுத்துச்சொல்லும் அளவுக்கு தன்னை இனிமேலாவது திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பல குற்றச்சாட்டுகளை எடுத்து வைத்திருக்கிறேன்' இன்னும் ஏராளமான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. குறிப்பாக லஞ்சம், ஊழலைப் பற்றி பேசவேண்டும். அதற்கு நேரமில்லாத காரணத்தால் இந்த அளவு பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(6) அரசினர் தீர்மானம்.

விதி 22-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

''சட்டமன்ற பேரவையில் முதல் ஒருமணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ நாளை அதாவது 21—2—1979 அன்று தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·38 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.